# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

1. நான் தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் ஓய்வூதியம் பெறுகிறேன். அவ்வப்போது உயரும் அகவிலைப்படி ஆணை வங்கிக்கு உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் அகவிலைப்படி உயர்வை நான் உடனுக்குடன் பெற முடியவில்லை?

ஐ.டி.ஏ/சி.டி.ஏ. அகவிலைப்படி ஆணைகள் இந்த அலுவலகத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட வங்கிகள்/தலைமை தபால் நிலையங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப் படுகின்றன. மற்றும் அகவிலைப்படி உயர்வை CCA இணைய தளம் மூலமாய் இனி அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.(ccatn.gov.in).

2. ஓய்வூதியத்தை வங்கிக் கிளையிலிருந்து தபால் அலுவலகத்திற்கு மாற்ற என்ன செய்ய வேண்டும்?

ஓய்வூதியதாரர் மாறுதல் வேண்டி ஒரு விண்ணப்பத்துடன் தனது ஓய்வூதிய ஆணையை சேர்த்து ஓய்வூதியம் பெறும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் வங்கிக் கிளையானது தன்னிடமுள்ள ஓய்வூதிய ஆணையுடன் இவற்றைச் சேர்த்து (CCA) கணக்கு கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு அனுப்புவர். அங்கிருந்து ஓய்வூதியம் பெற விரும்பும் தபால் அலுவலகத்திற்கு பொது மேலாளர், தபால் கணக்கு கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் மூலமாக(GM, Postal Accounts & Finance) அனுப்பப்படும்

3. நான் பி.எஸ்.என்.எல் ஓய்வூதியதாரர். எனக்கு எந்த விதமான மருத்துவப் படி கிடைக்கும்?

பி.எஸ்.என்.எல். மருத்துவச் சலுகையின் அடிப்படையில் அவரவர் ஊதியத்திற்கேற்ப மருத்துவச் சலுகைகள் கிடைக்கும். அதற்கு ஓய்வூதியதாரர் இறுதியாக பணிபுரிந்த பி.எஸ்.என்.எல். அலுவலகத்தை அணுக வேண்டும்.

4. பி.எஸ்.என்.எல். ஓய்வூதியதாரராகிய எனக்கு ஓய்வூதிய அடையாள அட்டை உண்டா? அதை யாரிடம பெற வேண்டும்?

உண்டு. ஓய்வூதிய அடையாள அட்டையை ஓய்வூதியதாரர் இறுதியாக பணிபுரிந்த பி.எஸ்.என்.எல். அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. ஓய்வூதிய அகவிலைப்படி முழு ஓய்வூதியத்தில் அல்லது கம்யூட் செய்ததை கழித்த பின் உள்ள ஓய்வூதியம் இவற்றில் எதில் கணக்கிடப்படுகிறது?

அகவிலைப்படி சதவிகிதம் எப்பொழுதும் முழு ஓய்வூதியத்திற்கு கணக்கிடப்படுகிறது.

6. கம்யூட் செய்த தொகை எப்பொழுது ஓய்வூதியத்துடன் மறுபடியும் சேர்க்கப்படும்?

கம்யூட் செய்ததால் கிடைக்கும் மொத்தப் பணம் கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 15 வருட காலம் முடிந்த பிறகே ஓய்வூதியத்துடன் மறுபடியும் சேர்க்கப்படும்.

7. குடும்ப ஓய்வூதியம் ஓய்வூதிய ஆணை பிறப்பிக்கப்படும் பொழுது அதிலேயே சேர்க்கப் படுகிறதா?

ஆம். கணவர்/மனைவி க்கு சேர வேண்டிய குடும்ப ஓய்வூதியத் தொகை ஒருவருடைய ஓய்வூதிய ஆணை பிறப்பிக்கப் படும் பொழுதே அதில் சேர்க்கப் படுகிறது. இது ஓய்வூதிய தாரரின் காலத்திற்குப் பின் வழங்கப்படும்.

8. குழந்தைகள் எந்த வயது வரை குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள்?

25 வயது வரை அல்லது திருமணம் அல்லது பணியிலமர்தல் இவற்றில் எது முன்னால் நிகழ்கின்றதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

9. உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏதேனும் விசேஷமான சலுகைகள் குடும்ப ஓய்வூதியத்தில் உண்டா?

ஆம். மாற்றுத் திறனாளியான குழந்தைகளுக்கு சில விதிகளுக்கு உட்பட்டு குடும்ப ஓய்வூதியம் வாழ்நாள் முடிய வழங்கப் படும்.

10. குடும்ப ஓய்வூதியம் மேற்கூறியவர்களுக்கு எந்த அடிப்படையில் வழங்கப் படுகிறது?

குடும்ப ஓய்வூதிய விதிகள் 54(12) அதனுடன் இணைந்த மத்திய அரசு தீர்மானம்(61ன் படி வழங்கப் படுகிறது). குடும்பத்தில் மாற்றுத் திறன் உள்ள குழந்தைகள் இருந்தால் அதை அலுவலக தலைமை அதிகாரிக்கு எழுத்து மூலம் உரிய மருத்துவச் சான்றதழுடன் (தலைமை அரசு மருத்துவரிடமோ அல்லது மருத்துவக்குழுவினரிடமோ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்) அலுவலகத்திற்கு சமர்ப்பித்து ஒப்புதல் கடிதம் பெற வேண்டும்.

அதன்பின் ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கும் சமயத்தில், இந்த ஒப்புதல் கடிதத்துடன் பி.எஸ்.என்.எல். அலுவலகத்தை அணுகவும்.

11. குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் இதர பணியில் இருப்பின் அகவிலைப்படி குடும்ப ஓய்வூதியத்திற்கு உண்டா?

உண்டு. 18.7.1997லிருந்து ஓய்வூதிய அகவிலைப்படி அன்னாருக்கு பெறத் தகுதியுண்டு.

12. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் என்றால் என்ன?

அரசு ஊழியர் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் அவரது மனைவி/கணவருக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் இறந்த நாளுக்கு அடுத்த நாள் முதல் தற்பொழுதுள்ள அரசு ஆணையின்படி பத்து வருட காலம் வரை வழங்கப்படும். அதன் பிறகு சாதாரண குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். பணி ஓய்வு அடைந்த பிறகு இறக்க நேரிட்டால் ஓய்வூதியதாரருக்கு 67 வயது ஆகும்வரை அல்லது 7 வருட காலம் இவற்றில் எது முன்னால் நடக்கின்றதோ அது வழங்கப்படும்.

| குறைபாடுகள் | தீர்வு காண வேண்டிய இடம்/அணுக வேண்டிய நபர் |
|---|---|
| 1. ஓய்வு பெற்ற பின்னர் புதிய மருத்துவ ஈட்டு முறைப்படி மருத்துவ சலுகைகள் பெற(MRS) | பி.எஸ்.என்.எல் |
| 2. பி.எஸ்.என்.எல் ஓய்வூதியதாரர்க்குரிய அடையாள அட்டை பெறுவது சம்பந்தமாக | பி.எஸ்.என்.எல் |
| 3. மாதாந்திர ஓய்வூதியம் பெறுவது சம்பந்தமாக | மாத ஓய்வூதியம் பெற வேண்டி விருப்பம் தெரிவித்த வங்கி அல்லது தபால் நிலையம் |
| 4. ஓய்வூதிய அகவிலைப்படி பெறுவது சம்பந்தமாக | மாத ஓய்வூதியம் பெற வேண்டி விருப்பம் தெரிவித்த வங்கி அல்லது தபால் நிலையம் |
| 5. முந்தைய தேதியிட்ட பதவி உயர்வினால் ஏற்பட்ட சம்பள ஏற்றம் அதனால் மாறக் கூடிய ஓய்வூதியம் பற்றிய விவரங்கள் அறிய | பி.எஸ்.என்.எல். அலுவலகத்தில் உள்ள ஓய்வூதிய பிரிவில் இது பற்றிய அனைத்து செயல்பாடுகளும் முடிந்ததை உறுதி செய்த பின்னர் கணக்கு கட்டுப்பாட்டாளர்(CCA) அலுவலகத்தை அணுக வேண்டும் |
| 6. குடும்ப ஓய்வு ஊதிய ஆணை பிறப்பித்தல் | கணக்கு கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் முதல் ஓய்வூதியத்திற்கான ஆணை |

| | |
|---|---|
| | பிறப்பிக்கும் பொழுதே குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியான கணவன்/மனைவி பெயருக்கு குடும்ப ஓய்வூதிய ஆணை பிறப்பிக்கப்பட்டு விடும். முன்னாள் இராணுவத்தினருக்கு மட்டும் தடையில்லாச் சான்றிதழ் (NOC) உரிய அலுவலகத்தில் பெறப்பட்ட பின்னர் குடும்ப ஓய்வூதிய ஆணை பிறப்பிக்கப் படும். |
| 7. குடும்ப ஓய்வு ஊதிய மறு ஆணை பிறப்பித்தல். | இறந்த ஊழியரின் குழந்தைகளுக்கு மேற்படி குடும்ப ஓய்வூதிய மாற்று ஆணை பிறப்பிக்கும் பொழுது பி.எஸ்.என்.எல் மூலமாக அதற்குரிய ஆவணங்களான வேலையில்லாச் சான்றிதழ், மணமாகா சான்றிதழ் ஆகியவற்றோடு கணக்கு கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தை அணுக வேண்டும். |

13. எனது அடிப்படை ஓய்வூதியம் மாற்றி அமைக்கப்படும் பொழுது அது எவ்வாறு எனது ஓய்வூதிய ஆணையில் குறிக்கப் படும்?

அடிப்படை ஓய்வூதியம் மாற்றம் அடையும் பொழுது அதற்கான ஆணை கணக்கு கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திலிருந்து வங்கி/தபால் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். அதன் ஒரு பிரதி ஓய்வூதியதாரருக்கும் அனுப்பி வைக்கப்படும். அது சமயம் தாங்கள் வங்கி/தபால் அலுவலகத்திற்குச் சென்று தங்களது ஓய்வூதிய ஆணையில் மாற்றத்திற்கான ஓய்வூதியத்தை குறிப்பிடச் செய்து கொள்ளலாம். அல்லது மாற்றத்திற்கான பிரதியை ஓய்வூதிய ஆணையுடன் இணைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

14. நான் வெளி மாநிலம் சென்று அங்கு தங்கும் சூழ்நிலை ஏற்பட்டால் எனது ஓய்வூதியத்தை மேற்படி மாநிலத்திற்கு மாற்றிக் கொள்ள இயலுமா?

ஆம். மாற்றிக் கொள்ள இயலும். உங்களது ஓய்வூதியத்தை இந்தியாவின் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறு வசதிகள் இருந்தாலும் அடிக்கடி மாற்றம் செய்யாமல் இருப்பது நல்லது.

15. நான் 25 வருடங்கள் பணி நிறைவு செய்து 31.3.2011ல் பணி ஓய்வு பெறப் போகிறேன். எனக்கு முழு பென்சன் தொகை கிடைக்குமா?

தற்பொழுதுள்ள அரசு ஆணையின்படி தங்களுக்கு முழு பென்சன் கிடைக்கும்.

16. நான் வங்கியில் ஓய்வூதியம் பெறுகிறேன். நான் எப்பொழுது வாழ்வியல் சான்றிதழ் (Life Certificate) தர வேண்டும்?

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் தாங்கள் வங்கி/தபால் அலுவலகத்திற்கு நேரில் சென்று உயிருடன் இருப்பதற்கான சான்றிதழைக் கொடுக்க வேண்டும். தவறினால் அடுத்த மாதத்திலிருந்தே ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப் படும்.

இணையதளம்: ccatn.gov.in
இலவச தொடர்பு எண்: 28587101 28587102
மின்னஞ்சல் முகவரி : ccatn@tn.nic.in.